முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1159

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.12.2022, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்திமிகு கலியுக ராஜனே
அன்னதான சேவையாற்றி அழியாமை மக்களுக்கு தர
வரமென என் சக்தியாக வந்த அரங்கனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15 ம் நாள் 01.12.2022, வியாழக்கிழமை)
இனிமைபட உன் உபதேச விளக்கங்கள்
இவ்வுலகை ஞான வழி கொண்டு செல்லும்
3. செல்லுமப்பா அரங்கன் உன் தர்மங்கள்
சித்திமிகு தர்மவான்களை படைத்து இனிதே
உத்தமமாய் நல்லுலகமாக்கி இந்த
உலகை ஞான ஆட்சிக்கு கொண்டு செல்லும்
4. செல்லவே அரங்கனால் தேர்ந்தெடுக்கும்
சித்திமிகு ஞானவான்கள் அனைத்து பேரும்
வல்லமைபட இந்த உலகை மாற்றுகின்ற
வரம்பெற்ற ஞானிகளாக உருவெடுத்து
5. உருவெடுத்து உலகமாற்றம் உன்னாலே
உயர்வான ஞான ஆட்சிக்காலமாக
வல்லமைபட சடுதி அமையக்கூடும்
வரம்தந்தேன் ஆறுமுகன் யான் இன்று உந்தனுக்கு
6. உந்தனுக்கு இன்னும் பல சக்திதன்னை
உயர்வாக நித்தம் நித்தம் யான் வழங்கி
செந்தூரான் என்னருள் சூட்சுமமாக
சிவராஜயோகி அரங்கன் நீ இன்னும் பல
7. இன்னும் பல அற்புதங்கள் தொண்டர்கட்கு
இடைஇடை ஞானமாக நீ அருளி
அருளியே உலக மாற்றம் செய்திடுவாய் அரங்கன் உன் அன்னதானத்தால் இந்த அற்புதம்
இருள் நீக்கி உலகை மீட்டருளும் எல்லா திக்கிலும் ஞான ஆட்சி உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–